**இலங்கை பொறியியல் பேரவைம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பொறியியல் பேரவையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2017 இன் 4 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவைச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, போரவையின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேரவையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பேரவை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பேரவையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பேரவையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும்
பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு

காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக
அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பேரவையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பேரவையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- பேரவை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பேரவையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம், அட்டுறு அடிப்படையில் பேரவையின் அனைத்து பதிவுக் கட்டணங்களையும் ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இலங்கை பொறியியலாளர்கள் | ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற வேண்டிய பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால், மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 845,000 | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம், வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்திடமிருந்து (IESL) பெற வேண்டிய பதிவுக் கட்டணமாக ரூபா 845,000 மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்திடமிருந்து (IESL) மற்றும் இலங்கை கூட்டமைக்கப்பட்ட பொறியியலாளர்கள் நிறுவனத்திடமிருந்து (IIESL) பதிவு செய்த அங்கத்தவர்களின் தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் பிரசுரிக்கப்பட்ட பதிவுக் கட்டண வருமானமான ரூபா 18,434,000 தொகையை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மாத்திரம் பெற வேண்டிய பதிவுக் கட்டணமாக காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>போறியியல் பேரவையில் பதிவு செய்தல் சட்ட ரீதியான தேவைப்பாடு அல்ல என்பதால், பேரவையால் அதனை குறிப்பிட முடியாதுள்ளது. | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 14 இன் பந்தி 34 இன் படி தொடர்புடைய தரப்பினருக்கு சபையினால் வழங்கப்படும் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பற்றி வெளிப்படுத்தப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 14 இன் பந்தி இலக்கம் 34 இன் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம், உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களில் வரவு செலவுத் திட்ட புள்ளி விவரங்கள் மற்றும் உண்மையான புள்ளிவிவரங்களுக்கு இடையே ஒரு இணக்கக்கூற்றினை உள்ளடக்குதல் அல்லது வரவு செலவுத் திட்ட புள்ளிவிவரங்கள் மற்றும் உண்மையான புள்ளிவிவரங்களுக்கு இடையே அளவு ரீதியான வேறுபாடுகள் இருப்பதற்கான காரணங்கள் விளக்கப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் அதற்கான அனுமதியைப் பெற முடியவில்லை. அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமொன்று இல்லாததால், இந்தச் செயன்முறையை மேற்கொள்ள முடியவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 15 இன் பிரகாரம், பாதிடப்பட்ட தகவல்கள் வெளியிடப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் குறிப்புகள் மூலம் பேரவைக்கு எதிராக வெளித்தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது வழக்குகள் பற்றி அது வெளிப்படுத்தப்படவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் அடிப்படையில நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் இந்த வழக்குகள் தொடர்பில் பேரவை எவ்வித இழப்பீடும் செலுத்த வேண்டியதில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க நிகழத்தக்க பொறுப்புகள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் ஊழியர் பணிக்கொடை பொறுப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | ஊழியர் பணிக்கொடை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்குரியதாக 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 76,416 கூட்டுத்தொகையான தொலைபேசிக் கட்டணங்கள் மற்றும் ஊக்குவிப்புப் படிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய நிலுவைகளாகக் காட்டப்படவில்லை. | 2022 திசெம்பர் மாதத்திற்கான தொலைபேசி கட்டணங்கள் 2023 சனவரி மாதத்தில் பெறப்பட்டன. ஊக்குவிப்புப் படிகள் செலுத்துவதற்கான பேரவையின் ஒப்புதல் 2023 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் பெறப்பட்டது. எனவே, மீளாய்வாண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டியவற்றின் கீழ் அவற்றை காண்பிக்க முடியாதிருந்தது. | ஆண்டுடன் தொடர்புடைய அனைத்து செலவுகளையும் கண்டறிந்து கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவைச் சட்டம் | | | |
| (i) பிரிவு 12(ஈ) | பொறியியல் பயிற்சியாளர்களின் தொழில் முறைகேடுகள் தொடர்பான விடயங்களில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றாலும், பொறியியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பயிற்சியாளர்கள் கடைப்பிடிக்க அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்முறை நெறிமுறைகளின்படி | பொறியியல் பயிற்சியாளர்களின் தொழில்முறை தவறான நடத்தைகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான சட்டங்கள் மற்றும் விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கு தேவையான உள்ளக நடைமுறைகள் தற்போது தயாராகி வருகின்றன. | 2017 இன் 04 ஆம் இலக்க இலங்கை பொறியியல் பேரவைச் சட்டத்தின் விதிகளின்படி, பொறியியல் பயிற்சியாளர்களின் தொழில்முறை தவறான நடத்தை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொறியாளர்கள் பணியாற்றுகிறார்களா என்பது சரிபார்க்கப்படவில்லை. | | |
| (ii) | 14(1) ஆம் பிரிவு | இலங்கை பொறியியல் பேரவையில் பொறியியல் தொழிலில் ஈடுபடுபவராக பதிவு செய்திருந்தால் மாத்திரமன்று, பொறியியலாளர் பொறியியல் தொழிலுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபடக்கூடாது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக இலங்கை பொறியியளாலர்கள் நிறுவனத்தின் (IESL) மற்றும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் (IIESL) ஆகியவற்றின் தொழில்வல்லுநர்கள் முறையே 19,825 மற்றும் 5,956 எனுமாறு 25,781 எண்ணிக்கையான பொறியியல் பயிலுநர்கள் பதிவு செய்திருந்த போதிலும், பொறியியல் பேரவையில் 17,680 பேர் மாத்திரம் பதிவு செய்திருந்தனர். எனவே, சுமார் 8,100 இற்கு மேற்பட்ட பொறியியல் பயிலுநர்கள் பதிவு செய்யாது பொறியியல் துறையில் ஈடுபடுகின்ற போதிலும் அது தொடர்பில் தொடர்புடைய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு மற்றும் பதிவு செய்யாது பொறியியல் | இலங்கை பொறியியல் பேரவைச் சட்டத்தின் 15(1) மற்றும் (2) ஆம் பிரிவுகளின் பிரகாரம் இலங்கை பொறியியளாலர்கள் நிறுவனத்தின் (IESL) மற்றும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொறியியல் நிறுவனம் (IIESL) ஆகியவற்றில் உறுப்பினர்களாக இருக்கும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள், இலங்கை பொறியியல் பேரவையில் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்கலாம். சட்டத்தின் 14(1) மற்றும் (2) பிரிவுகளின்படி பொறியியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் மட்டுமே பேரவையில் பதிவு செய்யப்பட வேண்டும் எனினும், பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடாத IESL மற்றும் IIESL ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு இது சட்டப்பூர்வ தேவைப்பாடு அல்ல என்பதுடன், பேரவையால் அதைக் குறிப்பிட முடியாது. ஆயினும்கூட, 2022 ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு பலமுறை தெரிவிக்கவும் நினைவூட்டவும் IESL மற்றும் IIESL நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு பொறியியல் தொழில் வல்லுநரின் சேவைகளை நாடும்போது, பேரவையின் அதிகாரப்பூர்வ இணையதளமான (www.ecsl.gov.lk) ஊடாக | இலங்கை பொறியியல் பேரவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துறைசார் பணிகளில் ஈடுபடும் நபர்களை இனங்காணுவதற்கும் இயலுமான வகையில் பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அது குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கான வசதிகளை செய்துள்ளது. | |
| (ஆ) | 1985 இன் 01 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் 09(2) ஆம் பிரிவு | நிதியத்திற்கான பங்களிப்பினை செலுத்தும் போது வருமானத்தை கணிப்பிடுவதற்கு பேரவையால் ஊழியர்களின் போக்குவரத்து கொடுப்பனவுகள், எரிபொருள் கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள், தொழில்முறை கொடுப்பனவுகள் மற்றும் சிறப்பு கொடுப்பனவுகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டமையால், அந்தந்த கொடுப்பனவுகளில் ஒவ்வொன்றும் 15 வீதம் பேரவையின் பங்களிப்புகளாக செலுத்தப்பட்டதுடன், ஒவ்வொரு 10 சதவீதமும் அதற்கும் அதிகமாகப் ஊழியரின் பங்களிப்பாக சேகரிக்கப்பட்டு நிதியத்திற்கு செலுத்தப்பட்டது. | நிதியத்திற்கான பங்களிப்புகளை செலுத்தும்போது, 1985 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 47 இன் படி வருவாயைக் கணக்கிடுவதற்கு சம்பளம் கருத்திற்கொள்ளப்படுகின்றது. மேலும், பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தொலைபேசி கொடுப்பனவு ஆகியவற்றைச் சம்பளத்துடன் சேர்த்துச் செலுத்தலாம். அதுமட்டுமின்றி, தொழில் உதவித்தொகை மற்றும் ரூபா 5,000 உதவித்தொகையும் மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படுகிறது. எனவே, ஊழியர்களின் சேம நிதியத்திற்கு பங்களிப்புகளை செலுத்தும் போது வருவாயைக் கணக்கிடுவதற்காக இந்த கொடுப்பனவுகள் கருதப்பட்டன. | ஊழியர் சேம நிதிய (திருத்தப்பட்ட) சட்டத்தின் 09(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்பினை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவு | நிதியத்திற்கான பங்களிப்பினை செலுத்தும் போது வருமானத்தை கணிப்பிடுவதற்கு பேரவையால் ஊழியர்களின் போக்குவரத்து கொடுப்பனவுகள், எரிபொருள் | நிதியத்திற்கான பங்களிப்புகளை செலுத்தும்போது, 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருவாயைக் கணக்கிடுவதற்கு சம்பளம் | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பங்களிப்பினை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவுகள், தொலைபேசி கொடுப்பனவுகள், தொழில்முறை கொடுப்பனவுகள் மற்றும் சிறப்பு கொடுப்பனவுகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டமையால், அந்தந்த கொடுப்பனவுகளில் ஒவ்வொன்றும் 3 வீதம் பேரவையின் பங்களிப்புகளாக செலுத்தப்பட்டது. | கருத்திற்கொள்ளப்படுகின்றது. மேலும், பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் போக்குவரத்துக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் தொலைபேசி கொடுப்பனவு ஆகியவற்றைச் சம்பளத்துடன் சேர்த்துச் செலுத்தலாம். அதுமட்டுமின்றி, தொழில் உதவித்தொகை மற்றும் ரூபா 5,000 உதவித்தொகையும் மாத சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படுகிறது. எனவே, ஊழியர்களின் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புகளை செலுத்தும் போது வருவாயைக் கணக்கிடுவதற்காக இந்த கொடுப்பனவுகள் கருதப்பட்டன. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் உப பிரிவு | வீட்டில் இருந்து வேலை செய்யும் போது கடமையில் செலவழித்த நேரம் மற்றும் மேற்கொண்ட கடமையைக் கண்டறிய முடியாததால் மேலதிக நேரம் அல்லது அதுபோன்ற கொடுப்பனவுகள் வழங்கப்படக்கூடாது என்றாலும், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சம்பளத்தில் 1/20 விடுமுறை படியாக மொத்தம் ரூபா 254,503 மற்றும் 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை வார இறுதி நாட்களிலும், பொது விடுமுறை நாட்களிலும் 95 நாட்களுக்கு வீட்டிலிருந்து கடமைகளைச் செய்ததற்காக ஊழியர்களின் | 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை தகவல் தொழில்நுட்ப அலுவலருக்கு வழங்கப்பட்ட விடுமுறை ஊதியம், தலைவரின் மேற்பார்வையின் கீழ் திறம்படப் பணியாற்றிய பிறகு வழங்கப்பட்டது. ஊழியர்களின் செயல்திறன் அவர்கள் செய்யும் வேலையின் அளவைக் கொண்டு அளவிடப்படுகிறது. எனவே, பெரும்பாலான பணிகள் பணியாளர்கள் இருக்கும் இடத்தைப் பொறுத்தது அல்லாது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்யப்பட்டுள்ளன. | தாபனவிதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்குமைய செயற்பட வேண்டும். தவறான கொடுப்பனவுகளை மீட்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் சேம நிதியப் பங்களிப்பு ஆகியவற்றுக்கு ரூபா 45,810 செலுத்தப்பட்டது. | | |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 137 | பேரவையின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படவில்லை. | கொடுப்பனவு தொடர்பான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நி.பி. 137 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 225(1) மற்றும் (2) | கொடுப்பனவுக்கான உறுதிச்சீட்டுகள் நிர்ணயிக்கப்பட்ட படிவங்களில் துல்லியமாகவும் முழுமையாகவும் தயாரிக்கப்பட வேண்டும் என்றாலும், பேரவையின் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்கு பயன்படுத்தப்படும் உறுதிச்சீட்டுக்கள் முறையே பொது 33 மற்றும் பொது 35(அ) படிவத்தைத் தவிர்த்து தயாரிக்கப்பட்டிருந்தன. | மேலதிக நேரம் மற்றும் சம்பளத்திற்கு தேவையான அனைத்து விவரங்கள் மற்றும் ஒப்புதல்கள் நிறுவனத்தின் உள்ளக முறைமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. அங்கு வினைத்திறனான முறையில் நேரத்திற்கு ஏற்ப மேலதிக நேர மற்றும் சம்பள உறுதிச்சீட்டுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. | நி.பி. 225(1) மற்றும் (2) ஆகியவற்றுக்கமைய உறுதிச்சீட்டுகளை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நி.பி. 264 | ரூபா 531,805 பெறுமதியான 20 கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பேரவையால் வெளி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு செலுத்திய கொடுப்பனவுகளுக்கு உறுதிச்சீட்டுகள் பெற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனைய உள்ளக கொடுப்பனவுகளுக்காக பொருத்தமான ஒழுங்கமைப்பொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | நி.பி. 264 இன் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PED/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | பொது முயற்சிகளுக்கான தாபன நிர்வாக வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தி | மீளாய்வாண்டுக்கான பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதனை தொடர்ச்சிய மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்தி | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைபு செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்படவில்லை. | வருடாந்த செயலாற்ற அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைபு செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,885,000 ஆன மிகையாக இருந்ததுடன்,அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,550,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,665,000 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பேரவையின் வட்டி வருமானம் ரூபா 2,684,000 இனால் அதிகரித்திருந்த போதிலும், சம்பளம் மற்றும் படிகளின் மற்றும் சட்டக் கட்டணம் ஆகியவற்றிலான முறையே ரூபா 2,455,000 மற்றும் ரூபா 3,875,000 ஆன அதிகரிப்பானது இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் சேம நிதியத்திற்கான பங்களிப்பை அடுத்த மாத இறுதிக்குள் செலுத்த வேண்டும் எனினும், 2019 ஒக்தோபர் மாதம் முதல் 2020 திசெம்பர் மாதம் வரையிலும் பேரவையில் சேவையாற்றும் இரு ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ஊழியர் சேம நிதிய பங்களிப்பை செலுத்தத் தவறியதால் மீளாய்வாண்டின் போது ரூபா 179,838 மிகை கட்டணம் செலுத்தப்பட்டது. | இலங்கை பொறியியல் பேரவையின் செயல்பாடுகள் 2018 ஆகஸ்ட் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கான அலுவலகம் 2019 செப்டம்பரில் பெறப்பட்டது. அங்கு, 2019 அக்டோபரில் பேரவையின் பணிகளைத் தொடங்குவதற்கு இரண்டு உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டதுடன், இரண்டு ஊழியர்களும் ஊழிஜயர் சேம நிதியத்தினை செலுத்தாமையால், ஊழியர் | ஊழியர் சேம நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிலுவைகளை உரிய நேரத்தில் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சேம நிதியச் சபையினால் குறித்த பங்களிப்புடன் ரூபா 179,838 ஆன மிகைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது. மிகைக் கட்டணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டது. | |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின்படி, சம்பள அளவு HM 1-3 இன் கீழ் தலைமை தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு MM நிலை பதவியில் 5 ஆண்டுகள் அனுபவம் தேவை என்றாலும், தலைமை தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தரின் சம்பள அளவுத்திட்டம் MM 1-1 இன் கீழ், அந்த நிலையில் ஒரு வருட தகுதியை நிறைவு செய்தவர்கள், சம்பள அளவுத்திட்டம் HM 1-3 இன் கீழ் தலைமை தகவல் தொழில்நுட்ப உத்தியேகத்தர் பதவியின் கடமையாற்றுவதற்காக 2022 நவம்பர் 28 ஆந் திகதி பணிப்பாளர் குழுவால் நியமிக்கப்பட்டனர். குறித்த நோக்கத்திற்காக கடமைகளுக்காக படிகள், ஊழியர் சேம நிதியத்திற்கா பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு என முறையே ரூபா 391,184, ரூபா 58,678 மற்றும் ரூபா 11,736 என மொத்தம் ரூபா 461,598 செலுத்தப்பட்டது. மேலும், 2022 சனவரி 14 ஆந் திகதிய 01/2015(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக MM 1-1 சம்பள அளவுதிட்டத்தின் கீழ் பதவி வகிக்கும் தலைமை தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு 2022 சனவரி முதல் யூன் வரையிலும் தலா ரூபா 40,000 படியாகவும், 2022 யூலை முதல் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2022 யூன் 27 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தலைமை தகவல் தொழில்நுட்ப அதிகாரி பதவி MM 1-1 இலிருந்து HM 1-3 ஆக உயர்த்தப்பட்டது மற்றும் அதை உள்வாங்குவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.<br><br>தலைமை தகவல் தொழில்நுட்ப அதிகாரி பதவி HM 1-3 சம்பள அளவுத் திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தாலும், MM 1-1 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிய உத்தியோகத்தர் ஒருவர் தற்போது அங்கு பணிபுரிகிறார். குறித்த உத்தியோகத்தர் சம்பள அளவுத்திட்டம் HM 1-3 இற்கு உரிய அனைத்து கல்வித் தகுதிகளையும் தொழில்சார் தகைமைகளுடன் பூர்த்தி செய்திருந்தாலும், 15 வருட அனுபவம் பூர்த்தி செய்யப்படாததால் உள்ளீர்ப்பு செய்தல் சாத்தியமற்றது. எவ்வாறாயினும், HM 1-3 சம்பள அளவுடன் பேரவையின் கடமைகளை குறித்த உத்தியோகத்தர் மிகவும் திறமையாகச் செய்கிறார்.<br>அதன்படி, இலங்கை பொறியில் பேரவை அதிகாரசட்டத்தின் 22 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கட்டளைக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தவறுதலாக செலுத்தப்பட்ட பணத்தை திரும்ப பெற ஏற்பாடு செய்ய வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் வரையிலும் ரூபா 50,000 எனுமாறு ரூபா 540,000 கூட்டுத்தொகையான போக்குவரத்து படிகளும், இருவருக்கும் தலா ரூபா 42,550 படியாக ரூபா 263,804 கூட்டுத்தொகையான எரிபொருள் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன. | அதிகாரத்தின் அடிப்படையில் தாபனவிதிக் கோவையின் II அத்தியாயத்தின் பிரிவு 13:5 இன் படி, “பதவியின் கடமைகளை மேற்கொள்ளல்” என்பதன் அடிப்படையில் சம்பள அளவுத்திட்டம் HM 1-3 இல் ஒரு பதவியில் செயல்பட தலைமை தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமிக்க பேரவை தீர்மானித்தது. தாபனவிதிக் கோவையின் VII அத்தியாயத்தின் பிரிவு 12:3, 12:5:1 இன் படி குறித்த ஊழியம் கணிப்பீடு செய்யப்பட்டதுடன், 2009 பெப்ரவரி 20 ஆம் திகதி 1589/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IX அத்தியாயத்தின் 119 ஆம் பிரிவின் பிரகாரம், HM 1-3 பதவியின் கடமைகளைச் செய்யத் தேவையான உத்தியோகபூர்வ படிகளும் செலுத்தப்பட்டன. மேலும், உழியர் சேம நிதியப் பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்பு ஆகியவையும் செலுத்தப்பட்டன. | |
| (ஆ) | ஊழியர் சேம நிதியத்திற்கு உத்தியோகத்தரிடமிருந்து 10 சதவீதமும், பேரவையால் 15 சதவீதமும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதிய அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம், ஊழியர் சேம நிதியத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், பேரவையின் பங்களிப்பானது 15 சதவீதமாக காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 6.1 இன் பிரகாரம் 12 சதவீதம் என குறிப்பிடப்பட்டிருந்தது. | இலங்கை பொறியியல் பேரவைச் சட்டத்தின் பிரிவு 22(2)(ஈ) இன் படி, ஊழியர் சேம நிதியத்திற்கு 10% உத்தியோகத்தரிடமிருந்தும், 15% பேரவையினாலும் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும், ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் 11 வது பிரிவின்படி 10% உத்தியோகத்தரிடமிருந்தும், 15% பேரவையினாலும செலுத்தப்படும் என ஊழியர் சேம நிதியச் சபைக்கு எதிர்காலத்தில் அறிவிக்கப்படும். | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியரி சேம நிதிய அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |